www.tamilarangam.net



வெளியீடு 5

அன்பார்ந்த தமிழ் மக்களே!

## தாய்லாந்து சமாதான பேச்சு

நோர்வே நாட்டின் அனுசரணையுடன் ஸ்ரீலங்கா அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் பல மாதங்களாகப் பிற்போடப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை செப்ரெம்பர்மாதம் 18ந்திகதி பற்பல எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஆரம்பமாகி முதற்சுற்று முடிவடைந்துள்ளது.

இதுதான் இலங்கையின் இனப்பிரச்னையை சுமூகமாகத் தீர்க்கும் நோக்கமாக வெளிநாட்டில் முதன்முறையாக நடைபெறும் பேச்சுவார்த்தை அல்ல.

ஏற்கனவே, 1985ம் ஆண்டு இந்தியாவின் அனுசரணையுடன், பூட்டான் நாட்டின் திம்பு நகரில், இலங்கை அரசிற்கும் ஐக்கியப்பட்ட அனைத்து தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அப்பேச்சுவார்த்தைகளின்போதுதான் ஐக்கியப்பட்ட அனைத்து தமிழ் அமைப்புகளினாலும் பின்வரும் நான்கு அடிப்படைக் கோரிக்கைகள் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்படவேண்டுமென ஈழத்தமிழர்கள் சார்பில் ஏகமனதாக வலியுறுத்தப்பட்டது —

- ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம்.
- ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை.
- ஈழத்தமிழர்களின் பாரம்பரியத்தாயகம்.
- மலையகத்தமிழர்களின் இலங்கைப் பிரஜாவுரிமை.

1985ம் ஆண்டிற்குப் பின்னர் — ஏறத்தாழ 17ஆண்டுகளாக — விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் ஸ்ரீலங்கா அரசிற்கும் இடையே நடைபெற்ற குரூரப் போரின் பின்னர், பல்லாயிரக்கணக்கான உயிர்கள் உடமைகளின் அழிவிற்குப் பின்னர், மக்களின் குடிபெயர்வுகள் புலம் பெயர்வுகள் சமுதாயச் சின்னாபின்னங்களின் பின்னர், நோர்வே நாட்டின் அனுசரணையுடன், ஈழத்தமிழர்களின் சார்பில் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் மட்டுமே பங்குபற்றும் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

இப்பொழுது, திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் போன்றில்லாது, ஐந்து கோடிக்கு மேற்பட்ட தமிழர்களை உள்ளடக்கிய அண்டை மாநிலமான இந்தியாவும், அமெரிக்கா பிரிட்டன் மலேசியா கனடா அவுஸ்தேரிலியா ஆகிய நாடுகளும் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் ஏகப்பிரதிநிதிகள் எனப் பிரகடனப்படுத்திக்கொண்டுள்ள புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யப்பட்ட சூழலில் தாய்லாந்து பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது.

அத்துடன், திம்பு பேச்சுவார்த்தைகளின்போது தமிழ் அமைப்புகள் சமர்ப்பித்த மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கோரிக்கைகள் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர்தான் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளைத் தொடரமுடியும் என்ற அடிப்படை நிலைமை மாறி, எதுவித அரசியல் தீர்வும் இரு சாராராலுமே முன்வைக்கப்படாது, தமிழீழ மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் எந்தளவிற்கு

www.tamilarangam.net



அங்கீகரிக்கப்படப் போகிறது என்பது பற்றி தெளிவுகள் எதுவுமின்றி, விடுதலைப்புலிகளுக்கே வடக்கு கிழக்கு நிர்வாக அதிகாரம் கையளிக்கப்படவேண்டும் என்பது பற்றியே சமாதானப் பேச்சுவார்த்தைகள் இருக்கவேண்டுமென்றும் — நிரந்தர அரசியல்தீர்வுபற்றி இருக்க வேண்டாம், இருக்கவும் கூடாது என்ற விசித்திரமான கோரிக்கைகளின் அடிப்படையில்தான் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந் நிலைமை, ஏறத்தாழ ஐம்பது வருடங்களாக ஈழவிடுதலைப் போராட்டத்தின் அரசியல் தந்தையென கருதப்படும் தந்தை செல்வாவைத் தொடர்ந்து பலரால் பற்பல விதங்களில் கோரப்பட்ட அடிப்படை நோக்கங்கள் உதாசீனப்படுத்தப்பட்டு, திசைதிருப்பப்பட்டு, இவ்வளவுகாலப் போராட்டமுமே ஒரு தனிஅமைப்பு தமிழர்களின் மேல் ஆதிக்கம் செலுத்தும் உரிமைக்காகவா? வெளிநாடுகளின் நிதியுதவி பெற்று இலங்கையின் தமிழ்ப்பகுதிகளினதும் இதர சிங்களப்பகுதிகளினதும் பொருளாதார வளத்தை மேம்படுத்த மட்டுந்தானா? — என்ற கேள்விகள் தமிழர் மத்தியில் முகிழ்க்கத் தொடங்கியுள்ளன.

இதனால், சிந்திக்கும் திறன் கொண்ட மக்களும் காலங்காலமாக தமிழ்மக்களின் விமோசனத்தில் அக்கறை கொண்டுவந்தவர்களும், பங்களித்தவர்களும், உயிர்கள் உடமைகளை இழந்தவர்களும், பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலைமைக்கல்லவா தமிழர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று விசனிப்பதில் நியாயம் இருக்கிறது.

தாய்லாந்தில் நடைபெறும் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் அரச குழுவில் இடம் பெற்றவர்கள் ஜி.எல்பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம். — இவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஸ்ரீலங்காபிரஜைகள்.

விடுதலைப்புலிகள் குழுவில், தமிழர்கள் சார்பில் இடம் பெற்றவர்கள் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், வி. உருத்திரகுமாரன், ஜே. மகேஸ்வரன். — இவர்களில் எவருமே மக்களால் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் — அந்நியநாட்டுப் பிரஜைகள்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டு அரசியல் போராட்டத்தின் பின்னரும், 20 ஆண்டு ஆயுதப் போராட்டத்தின் பின்னரும், ஈழத்தமிழர்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்கு, அவர்களினதும் அவர்களினது எதிர்காலச் சந்ததியினரதும் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவருக்குமே தகுதியோ தாற்பரியமோ இல்லையா? — தமிழர்களைப் பிரநிதிப்படுத்துவதற்கு எத்தனையோ சொல்லொணா இடர்களின் மத்தியிலும் ஈழமண்ணையும் மக்களையும் நேசித்து அங்கேயே வாழ்ந்துவரும் திறமைசாலிகளான ஆண்களோ பெண்களோ இல்லையா?

தமிழர்களின் அரசியல் வாழ்வு, எதிர்காலம் ஆகியவற்றை நிர்ணயிக்கும் கடமை, உரிமை, திறமை வெளிநாட்டைச் சேர்ந்தவர்களிற் தங்கியிருக்கவேண்டி வந்துள்ளது. அதற்காக என்ன காரணங்கள் கூறப்பட்டாலும் இந்நிலைமை ஏன், எப்படி வந்தது என்பதை சிந்திக்கவேண்டியது தமிழர்களின் தார்மீகக் கடமையாகும் — இப்படி ஒரு நிலமை உலகின் எந்த விடுதலைப் போராட்டங்களில் எப்பொழுதுமே ஏற்பட்டதில்லை.

இந் நிலைமை ஈழத்தமிழர்களையே நிந்தனை செய்வதாகும். இனிவரப்போகும் அடுத்த சுற்று பேச்சுவார்த்தைகளிலாவது இந்நிலை மாறவேண்டும், மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களும் மண்ணில் அரசியல்ரீதியாக செயற்பட்டு வருபவர்களும்

www.tamilarangam.net



தமிழர் தரப்பில் பேசவேண்டும் என்பதே தமிழ்அரசியல் சிந்தனையாளர்கள், தமிழர் நலனில் அக்கறை கொண்டவர்கள் ஆகியோரின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

அரசியல் தீர்வை விலக்கி இடைக்கால நிர்வாகம், பொருளாதாரம் வெளிநாட்டுப் பணஉதவியைப் பங்கிடுதல் ஆகியவற்றைப் பற்றியே பேச்சுவார்த்தைகள் இருக்குமானால் விடுதலை வேண்டி நிற்கும் ஒரு இனத்தின் பேச்சுவார்த்தையாக இதனைக் கொள்ளமுடியாது. மாறாக, வணிக நோக்குடன், இரு வர்த்தக ஸ்தாபனங்களுக்கிடையில், அதன் பங்குதாரர்களுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் சாயலில்தான் தாய்லாந்து பேச்சுவார்த்தைகளின் அடிப்படையும் அமைந்திருக்கிறது என வெளிநாட்டு அரசியல் விமர்சகர்கள், வெவ்வேறு நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் பங்குபற்றியவர்கள் சுட்டிக்காட்டும்பொழுது வேதனை ஏற்படத்தான் செய்கிறது.

ரி.என்.ஏ. என்ற கூட்டின் முக்கியத்துவந்தான் என்ன? அவர்கள் மக்களின் பிரதிநிதிகள் இல்லையா? மக்களின் வாக்களிப்பு மதிப்பற்றதா? ரி.என்.ஏ. என்பது ஒரு பம்மாத்துத்தானா? மக்களை ஏமாளிகளாக்கும் வித்தைகளின் வெளிப்பாடுதானா?

ரி.என்.ஏ. என்ற அமைப்பு புலிகளின் ஆயுத நிர்ப்பந்தத்தினால் தோன்றிய அமைப்பு. காத்திரமான மாற்று அரசியல் கட்சிகள் இல்லாத நிலையில் ரி.யு.எல்.எவ்.ஐ நோக்கி மக்கள் சாயும் நிலையை முறியடிப்பதற்காக, ரி.யு.எல்.எவ்.ஐ சுவீகாரம் செய்து அரசியல்ரீதியாக கையாலாகாதவர்களாக்க புலிகள் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவே ரி.என்.ஏ.— என்ற அரசியல் அவதானிகளின் அனுமானங்கள் நாளடைவில் நிருபணமாகி மக்களுக்குப் புலனாகிறது.

ரி.என்.ஏ. என்ற அமைப்பை தனி அரசியல் கட்சியாக பதிவு செய்யவேண்டுமென்று ரி.யு.எல்.எவ். அல்லாதவர்களால் எடுத்துவரும் முயற்சிகளும், ரி.யு.எல்.எவ்.ஐ நிர்மூலமாக்கும் முனைப்புகளின் வெளிப்பாடுகளே.

இதனால்தான், ரி.யு.எல்.எவ். மீதான தமது ஆளுமையைப் புலிகள் தம் நடைமுறைகளினூடாக அவ்வப்போது வெவ்வேறுவிதமாக பிரகடனப்படுத்தி வருகிறார்கள். தற்போதைய ரி.யு.எல்.எவ் தலைமையும், உயிருக்கு அஞ்சியும், பதவிசுகம் பறிபோய்விடுமோ என்று பயந்தும் சுயமரியாதையை ஆழப்புதைத்துவிட்டு, ஒற்றுமை என்ற பெயரில் கையாலாகாத, சுரணையற்ற அரசியல் பிழைப்பு நடாத்திக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் தங்களுக்காகக் கொடுத்த ஜனநாயக அதிகாரத்தைப் பிரயோகித்து மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, மக்களுக்கான ஜனநாயகச் சூழலை செழுமைப்படுத்துவதற்குப் பதிலாக ஆயுதபலத்திற்கு அடிபணிந்து தேர்தல் வேண்டாம், தேர்தல்களில்லாது இடைக்கால நிர்வாகத்தை தங்களுக்குக் கையளிக்க வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்கி சோரம் போகிறார்கள்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தை என்கிறார்கள். ஆனால் பேச்சுவார்த்தைகளின் மூலப்பொருள் பற்றி இந்த மக்கள் பிரதிநிதிகள் எந்தவித அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை.

ரி.என்.ஏ. என்ற கூட்டமைப்பு வெறும் கண்துடைப்பு. மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கையை துச்சமென மதித்து செயற்பட்ட ரி.யு.எல்.எவ்.இன் நிலையை அம்பலப்படுத்திய காலத்தின் கண்ணாடி — ஆயுதமற்ற சூழலில் தானாகவே நொருங்கி விடும் கண்ணாடி வார்ப்பு.

www.tamilarangam.net



பேச்சுவார்த்தைகளின் போக்கைப் பார்க்கும்போது, இருசாராரும் இனப்பிரச்னைக்கான தீர்வு, மக்களின் நிரந்தர நலன் என்பவற்றைவிட தத்தமது கட்சிகளின், அமைப்புகளின் நலன்களை எவ்வாறு காப்பாற்றலாம், பலப்படுத்தலாம் என்ற அடிப்படையிலேயே காய்களை நகர்த்துகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

யு.என்.பி.யை பொறுத்தவரை சர்வதேச ஆதரவுடன், பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதாகக் காட்டி, வெளிநாட்டு ஸ்தாபனங்களின் நிதியுதவியைப் பெறுவதுடன், இடைக்கால வடக்கு– கிழக்கு நிர்வாகத்தை புலிகளுக்கு கையளித்து ஆனால் எதுவித நிரந்தர அரசியல் தீர்வையுமே அளிக்காது காலத்தைக்கடத்தி சிங்கள மக்களிடையே தங்கள் கட்சியின் அரசியல் பலத்தை விஸ்தரிப்பது.

புலிகள் தரப்பினரைப் பொறுத்தவரை சர்வதேச அழுத்தங்களைத் தவிர்த்து தங்களது நிதி ஆயுதக் குவிப்புகளை மேலும் விஸ்தரிப்பதோடு, யுத்தத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் மாற்று அரசியல் கட்சிகள்பால் சாயாதிருக்காமல் பார்ப்பது. தமிழ்மக்கள்மேல் இடையூறற்ற ஏகபோக ஆதிக்கம் செலுத்துவது.

இதைவிட இப்பேச்சுவார்த்தைகள் அரசியல் தீர்வு தொடர்பாக எதையும் சாதிக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் இழக்கத் தொடங்கி விட்டார்கள்.

இது ஒருபுறமிருக்க, யுத்தநிறுத்தத்தின் பின்னர், கடந்த பலமாதங்களாக ஸ்ரீலங்கா அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பாரிய மோதல்கள் தவிர்க்கப்பட்டு இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளிலும் இதர பகுதிகளிலும் இயல்பு வாழ்க்கை திரும்பிக் கொண்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கும் விடயமே.

அத்துடன், தமிழ்மக்கள் தமது அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயகம் பற்றிய பிரக்ஞைகளை திரும்பவும் அடைந்துவரும் அறிகுறிகள் தென்படத் தொடங்கியிருப்பதும் வரவேற்கவேண்டியவையே.

போரற்ற சூழ்நிலையும், சுயகௌரவத்துடன் மக்கள் தமது ஆதங்கங்களை, கோரிக்கைகளை வெளிப்படுத்தும் உரிமையும், அரசினால் தடுக்கப்படாமலும், ஆயுதபாணிகளால் துஷ்பிரயோகப்படுத்தப்படாமலும், மீண்டும் எக்காரணம் கொண்டும் இந்நிலமை சீரழிய விடாமல் பேணிக் காப்பதும் அனைத்து மக்களினதும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

வெறும் உணர்ச்சிகளைத் தூண்டும் கோஷங்களை முன்வைத்து, வீறாப்பு அரசியல் பேசி, மீண்டும் ஆயுதஅடக்குமுறைப்பாதைக்குத் திருப்பப்படக்கூடிய போக்குகளை இனம் கண்டு அவற்றை முளையிலேயே கிள்ளி எறிவோம் என்ற திடசங்கற்பத்துடன் நாம் செயற்படவேண்டும்

செயல்கள், நடைமுறைகள் யாவுமே, யுத்தமற்ற சமாதானச் சூழல், மக்களின் சுயகௌரவம், மனிதாபிமானம், மனித உரிமைகள், ஜனநாயக கோட்பாடுகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துபவையாக இருத்தல் வேண்டும் .

புரையோடிப்போயிருக்கும் இனப் பிரச்னைக்கான நிரந்தரத்தீர்வுபற்றிய கருத்துக்களை மக்கள் எதுவித ஆயுதபலத்தின் பலாத்காரங்களோ நிர்ப்பந்தங்களோ இன்றி வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கான நிலைமைகளை ஏற்படுத்துவது இக்காலகட்டத்தில் இன்றியமையாததாகும்.

www.tamilarangam.net



காலம் தாழ்த்தாது, பேச்சுவார்த்தைகளின் திசைகள் மக்கள் விரும்பும் நிரந்தர அமைதிச்சூழலையும், தமிழ் மக்கள் காலாகாலமாக அரசியல் ரீதியாகவும் ஆயுதப்போராட்டத்தை ஆதரிப்பதன் மூலமாகவும் வெளிப்படுத்திய அரசியல் அபிலாஷைகளை பிரதிபலிக்கக் கூடிய நிரந்தரத்தீர்வை நோக்கி நகர்த்தப்படல் வேண்டும் என்பதே எமது விருப்பம் — இதுவே ஈழத்தமிழர்களின் நிரந்தர அமைதிக்கும் விமோசனத்திற்கும் வழிகோலியதாக அமையும்.

தமிழர்களின் உணர்ச்சிகளுக்கு இதமாக தமிழீழம் என்ற மாயமானைக் காட்டிக் கொண்டு இடைக்கால நிர்வாகத்தை புலிகள் எடுப்பதற்கு மட்டும் தாய்லாந்து பேச்சுவார்த்தைகளை விடுதலைப்புலிகள் – பயன்படுத்துவதெல்லாம் அவர்கள் தமிழர்கள்மீது ஏகபோக ஆதிக்கம் செலுத்துவதற்குத்தான் என்ற வசையை விலக்கவேண்டும்.

உண்மையான நிரந்தரமான அரசியல் பரவலாக்கம் பற்றி சிங்கள அரசை நெகிழ வைத்து தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்து, தமிழரை மறுபடியும் போருக்குள் தள்ளாதவாறு இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தாய்லாந்து பேச்சுவார்த்தைகள் அளித்திருக்கும் சந்தர்ப்பத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தவேண்டுமென்பதே ஈழத்தமிழர்களின் உள்ளார்ந்த எதிர்பார்ப்பாகும்.

சிந்திப்போம் — செயற்படுவோம்.

நன்றி

Tamil Progressive Movement
**(தமிழர் முன்னேற்ற இயக்கம்)**
B.M. BOX NO: 1738
LONDON WC1X 3NN
U.K.

25 SEPTEMBER 2002